

# ‘ஜெயித்து வாழ்ந்திட’ வாலிபர் செய்திகள்!

“வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்”
(சங்கீதம். 127:6)

(சிருஷ்டிகரிடம் சரணடைந்து வாழ்ந்திட அழைக்கும் செய்திகள்)

| 10.10.2022 | தெய்வ ஞானத்தின் அதிசயம் கண்டு, சிருஷ்டிகரிடம் திரும்புங்கள்! |
|---|---|

ஒரு பெரிய ஆலமரத்தை நான் பார்த்துக்கொண்டிருந்தேன்! பிரமாண்டமான அந்த மரம் தனது விசாலமான கிளைகளை நான்கு திசைகளிலும் பரப்பியிருந்தது. அந்த மரத்தின் பெரிய கிளைகள் முறிந்து விழுந்துவிடாமல் இருக்க, கிளைகளிலிருந்து விழுதுகள் கீழே நோக்கி இறங்கி வந்து மண்தரையில் தொங்கிக்கொண்டிருந்தன. தொங்கிக் கொண்டிருந்த விழுதுகள் சில இடங்களில் பூமியை வந்து தொட்டு, மரகிளைகளுக்கு ஊன்று கோல்களாக நின்று கொண்டிருந்தன. தொங்கிக்கொண்டிருந்த இளம் விழுதுகளில் சிறுவர்களும் வாலிப பிள்ளைகளும் ஊஞ்சல் கட்டி ஆடி மகிழ்ந்து கொண்டிருந்தனர். ஆலமரத்தின பழம் பழுக்கும் காலமானதால் கிளிகள், மைனாக்கள், குயில்கள் போன்ற பறவைகள் ஆனந்தக் குரல்கள் எழுப்பிக்கொண்டே பழங்களை கொத்தித் தின்று கொண்டிருந்தன. அந்த ஆனந்தமான குரல்களைக் கேட்டு மனம் மகிழ்ந்த நிலையில், அந்த மரத்தின் நிழலில் அப்படியே கண்ணயர்ந்து நித்திரை செய்வோரையும், ஆங்காங்கு சிறு சிறு கூட்டமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் மக்களையும் நான் கண்டேன். ஆலின் சிறு பழத்தின் ஒரு விதை மன்னனுக்கும், அவனது பரிவாரங்களுக்கும் நிழல் கொடுக்கும் விதத்தில் பிரமாண்டமாக வளர்ந்து படந்து கிடக்கின்றது. அந்த ஆலமரத்தின் சிறிய விதையை நாம் நமது நகத்தில் வைத்து நசுக்கி ஒன்றுமில்லாமல் செய்து விடலாம்! அத்தனை சிறிய விதை, கடினமான கருங்கல் பாறையில் விழுமானால், அந்தப் பாறையை அது உடைத்துக் கொண்டு, தனது வேர்களை ஊன்றும்! பனை, வேம்பு போன்ற மரங்களில் விழுமானால் அந்த மரங்களை அப்படியே அது ஊடுருவிப் பிளந்து கொண்டு சென்று, தனது ஆதிக்கத்தை மட்டும் நிலைநிறுத்தி விடும். ஆ, தேவனுடைய ஞானத்தை என்னவென்று சொல்லுவது! ஒரு சிறிய அற்பமான வித்துக்குள் எத்தனை வலிமையை தேவன் வைத்து படைத்துள்ளார்.

எந்த ஒரு ஜீவராசியையும் முழுமையாக ஆராய்ந்து, இதுதான் இதன் சரித்திரம் என்று முற்றுப்புள்ளி கொடுக்க நாசியில் சுவாசமுள்ள மனிதனால் இயலாது. அதற்குரிய முழுமை ஞானம் அதின் சிருஷ்டிகரின் கரத்தில் மட்டுமே உள்ளது. மூன்று மைல்களுக்கு அப்பாலிருந்து தேனை சேகரித்து வந்து, தனது தேன்கூண்டில் சேர்க்கும் தேன் ஈயைக் குறித்துகூட மண்ணான மனிதனால் முழுமையாக ஆராய்ச்சி செய்து, இதுதான் தேனீயின் முழுமையான வாழ்க்கை வரலாறு என்று முடிவு செய்து எழுத அவனால் கூடாது. ஓ மனிதனே, இத்தனை மகத்துவ தெய்வ ஞானத்தை நாம் புறக்கணிப்பது சரிதானா? கர்த்தருக்கு பயப்படுகிற பயமே தெய்வ ஞானத்தின் ஆரம்பம் என்பதை அறிந்து, தேவனிடத்தில் மனந்திரும்பி ஓர் புதுவாழ்கை துவங்கி வாழுங்கள்!

**- வாலிபம் இயேசுவுக்கே**